
DINAKARAN (10/12/14)




புதுவையில் 17வது தேசிய நூலக மாநாட்டை முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் தொடங்கி வைத்து விழா மலரை வெளியிட்டார்.

## ஒவ்வொரு வீட்டிலும் சிறிய நூலகம்

# செல்போனில் நூலக வசதி

### அப்துல்கலாம் பேச்சு

புதுச்சேரி, டிச. 10: அனைத்து நூல்களையும் மொழிமாற்ற வசதியுடன் படிக்கும் வகையில் புதிய தொழில்நுட்பத்தை செல்போன்களில் ஏற்படுத்த வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் பேசினார்.

பிரெஞ்சு ஆய்வு நிறுவனமும், புதுடெல்லி டெல்நெட் நிறுவனமும் இணைந்து நடத்தும் 'அறிவு வளர்ச்சி, நூலகவியல் மற்றும் தகவல் கட்டமைப்பு' (நேக்லின் 2014) என்ற தலைப்பில் 17வது தேசிய நூலக மாநாடு புதுவையில் 3 நாட்கள் நடக்கிறது. இதன் தொடக்க விழா நேற்று நடந்தது. புதுவை பிரெஞ்சு ஆய்வு நிறுவன இயக்குனர் டாக்டர் பெர்ரி கிரார்டு தலைமை தாங்கினார். தலைமை நூலகர் அனுரூபா நாயக் வரவேற்றார். புதுடெல்லி டெல்நெட் இயக்குனர் டாக்டர் கவுல் அறிமுக உரையாற்றினார்.

இதில் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல்கலாம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாநாட்டை தொடங்கி வைத்து பேசியதாவது:

புதுவை ஆன்மீகத்துக்கும், கல்விக்கும் பெயர் பெற்ற இடமாக உள்ளது. நூல்கள்தான் ஒருவரது வாழ்வில் சிறந்த வழிகாட்டியாகவும், நண்பனாகவும் விளங்குகிறது. கடந்த 1950ம் ஆண்டுகளில் நான் பயிலும்போது மூர்மார்க்கெட் பகுதிதான் எனக்கு மிகவும் பிடித்த இடமாக விளங்கியது. ஏனெனில் அங்கு அதிகளவில் புத்தகங்களை வாங்க முடியும். அதில் வாங்கி படித்த புத்தகங்கள் எனது வாழ்வில் உந்து சக்தியாக விளங்கின.

மாணவ, மாணவிகளிடையே வாசிக்கும் பழக்கத்தை மேலும் ஊக்கப்படுத்த வேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் தங்களது வீடுகளில் 20 முதல் 30 நூல்களை கொண்ட சிறிய நூலகங்களை ஏற்படுத்த வேண்டும். அதில் குழந்தைகள் நூல்கள் குறைந்தது 10வது இருக்க வேண்டும். நாள்தோறும் குடும்ப உறுப்பினர்கள் 1மணிநேரம் நூல்களை வாசித்து அதன் பொருள் குறித்து விவாதிக்க வேண்டும்.

இதன் மூலம் குடும்பத்தில் அனைவரது அறிவும் பெருகும். இணக்கமான சூழ்நிலையும் ஏற்படும். பெற்றோர்கள் நூல்களை வாசித்தால் குழந்தைகளும் தானாகவே வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கி கொள்வர்.

தற்போது நவீன தொழில்நுட்பம் பெருகி விட்டது. அனைவரும் தங்கள் செல்போன்கள் மூலமே தேவையான தகவல்களை அறிந்து கொள்கின்றனர். இந்தியாவில் தற்போது 80கோடி பேர் செல்போன்களை பயன்படுத்துகின்றனர். எனவே செல்போன்களிலேயே நூலக வசதியை ஏற்படுத்தலாம். இதற்கான தொழில்நுட்ப வசதியும் உள்ளது.

அனைத்துநூல்களையும் மொழிமாற்ற வசதியுடன் படிக்கும் வகையில் புதிய தொழில்நுட்பத்தை செல்போன்களில் ஏற்படுத்த வேண்டும். இதனால் அதிநவீன யுகத்திலும் நூல்களை வாசிக்கும் பழக்கம் குறையாமல் இருக்கும். தற்போதைய கால கட்டத்துக்கேற்ப அனைத்து நூலகங்களையும் கணினிமயமாக்கி டிஜிட்டல் மயமாக்குவது அவசியமாகும்.

2200 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட திருக்குறளுக்கு ஈடு இணை ஏதுமில்லை. அதை இயற்றிய திருவள்ளுவர் உலகின் அனைத்து வகையான விசயங்கள் குறித்தும் இருவரிகளில் தெளிவாக விளக்கி உள்ளார். புத்தகங்கள்தான் ஒருவரை முழுமனிதனாக மாற்றும் சக்தி உடையவை. எனவே அனைவரும் தரமான நல்ல நூல்களை நாள்தோறும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

முன்னதாக நூலகப் பயன்பாடு குறித்த கண்காட்சியையும் அப்துல்கலாம் தொடங்கி வைத்தார்.

மாநாட்டின் அமைப்பு செயலாளர் சங்கீதா கவுல் நன்றி கூறினார். இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்தும், இந்தியாவில் பல்வேறு கல்வி நிறுவனங்களில் இருந்தும் 350க்கும் மேற்பட்ட அறிஞர்கள், மாணவர்கள், நூலகர்கள் இம்மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். நாளை (11ம்தேதி) வரை இந்த மாநாடு நடக்கிறது.



அரவிந்தர் ஆசிரமத்துக்கு சென்று விட்டு முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் வெளியே வருகிறார்.